# மக்கள் மறுவாழ்வு

மக்கள் மறுவாழ்வு
சந்தா விபரம்
தனிப்பிரதி 75 காசுகள்
வருட சந்தா ரூபா 10-00
விபரங்களுக்கு:
மக்கள் மறுவாழ்வு
சென்னை-600 094.

மலர் : 31 வைகாசி - மே 1985 இதழ் : 8


## இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல்சேவை இல்லாததால்

## ஒப்பந்தப்படி தாயகம் திரும்ப வேண்டியவர்கள் தவிப்பு!

**கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால், தாயகம் திருப்பி அனுப்பப்படவிருக்கும் பல ஆயிரக்கணக்கான மலையக தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து வெளியேற இயலாது தவிப்பதாகவும், தங்களது வேலையை இழந்த நிலையில் பாதிக்கப்பட்டு வாடுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல் கூறுகின்றன.**

அங்கு நீண்ட காலமாக எல்லா உரிமைகளையும் இழந்து நாடற்ற மக்களாக மலையகத்தமிழ் மக்கள் இருந்தார்கள். 1934யில் இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தப்படி 5 லட்சத்து 25 ஆயிரம் பேரை இந்தியாவும் 3லட்சத்து 25 ஆயிரம் பேரை இலங்கையும் ஏற்றுக் கொள்வதாக முடிவானது. 1974 யில் மேலும் மிகுதியுள்ள 1லட்சத்து 50 ஆயிரம் பேர்களில் தலா 75 ஆயிரம் பேரை ஏற்றுக் கொள்வதென முடிவானது.

இதன்படி 1லட்சத்து 95 ஆயிரத்து 191 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கியது. இந்தியா குடியுரிமை வழங்கப்பட்டு சென்ற ஆண்டுவரை 3 லட்சத்து 33 ஆயிரத்து 755 பேர் [ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 919 குழந்தைகளும்] இந்தியா வந்து சேர்ந்துள்ளனர்.

84 ஆயிரம் பேர் இந்தியா வருவதக்கான கடவுச்சீட்டு முதலானவைகள் பெற்று தயாராகஉள்ளனர் என்பதோடு ஒப்பந்தப்படி 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இங்கு இருப்பவர்களாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியக்குடியுரிமை பெற்று வர இருப்போர் இந்தியா வருவதற்கு தேதி குறிப்பிட்டு 3மாதமாகிய பின்னர் வேலை இழந்து விடுவர்.

இந்தியா வர இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல் போக்குவரத்து நடை பெற வேண்டும். சென்ற ஆண்டு இந்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் இவர்கள் இந்திய வரமுடியாது தவிக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா செல்கிறோம் என்ற நம்பிக்கையில் ஏற்பாடுகள் செய்து கப்பல் போக்குவரத்து இல்லாததால் இப்போது பிரச்சனைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இந்திய கடவுச்சீட்டுப்பெற்று பில் புறப்படுவதற்கான தேதி குறிப்பிடப்பட்ட 3 மாதங்களில் வேலை நிறுத்தப்படும். இந்த வகையில் அவர்கள் வேலையிழந்து தவிக்கும் தலைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

வேலையிழந்து பசி பட்டினியில் அவதியுறுவது மட்டுமல்ல; இந்தியக் குடியுரிமைப் பெற்று இந்தியா வர இருக்கும் மலையகத்தமிழர்கள் இராணுவத்தினர்களால் தாக்கப்பட்டு கொடுமைகுள்ளாகப்பட்டுள்ளனர். ஈழப் போராட்டத்தோடு தொடர்புப் படுத்தம்பட்டு இளைஞர்கள் பெண்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டு கொடுமைக்குள்ளாகப் படுகிறார்கள்.

### இவர்கள் மீது தாக்குதல்கள்

மலையகத்தில் "கண்காணிப்பு குழு"க்கள் உருவாக்கப் பட்டுள்ளன, இக்குழுக்களில் முழுக்க முழுக்க சிங்கள குண்டர்கள்தான் இடம் பெற்றிருக்கிறார்கள். இராணுவத்தினர் போல இவர்களும் பல தொல்லைகளையும், துன்பங்களையும் கொடுத்து வருகிறார்கள்.

மலையகம் எங்கும்கூட விடுதலைப் புலிகளே நிறைத்திருக்கிறார்கள் என்று பயமும் கிலியும் கொண்டிருக்கும் போலீசாரும், இக்குண்டர்களும் துன்புறுத்தி வரக் காரணம்.

(11-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் குறித்து பிரதமர் ராஜீவ்காந்தி கருத்து

மக்கள் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அவர்கள் சுதந்திரம் பறிக்கப்படும் போதெல்லாம் இந்தியா வேதனை அடைகிறது. சுமார் ஒரு லட்சம் பேர் அகதிகளாக இந்தியா திரும்பியுள்ளனர். இது கவலை அளிப்பதாக உள்ளது.

காங்கிரஸ் நூற்றாண்டு விழாவையொட்டிய பொதுக்கூட்டமொன்றில் பிரதமர் ராஜீவ் இவ்வாறு கூறியுள்ளார்.

"இலங்கையில் சகஜ நிலை ஏற்பட வேண்டும் என இந்தியா விரும்புவதாகவும் கூடிய விரைவில் இலங்கை அகதிகள் கௌரவத்துடனும், கண்ணியத்துடனும் தங்கள் நாடு திரும்ப வகை ஏற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்

இலங்கையின் இனப் பிரச்சனை அந்த நாட்டின் உள்நாட்டு விவகாரமாகும். எனினும் இலங்கைத் தமிழர்களை எதிர்நோக்கும் பிரச்சனைகள் இந்தியாவைப் பாதிக்கிறது என்றும் குறிய்பிட்டுள்ளார்.

# மக்கள் மறுவாழ்வு

மலர் : 3] வைகாசி—மே '85 [இதழ் : 8

## நடுத் தெருவில் நிறுத்துவதா ?

தாயகம் திரும்பியோர் மத்தியில் பல தன்னார்வக் குழுக்களும், சங்கங்களும், அமைப்புகளும் சேவை யாற்றி வருகின்றனர்.

இவைகளில் குறிப்பிடத்தக்க சில அமைப்புகள் வழி காட்டுதல், அரசுமூலம் கிடைக்கவேண்டிய உதவிகளை பெற்றுக் கொடுத்தல், இன்னும் projectகள் அமைத்து வேலைவாய்ப்புகள் அளித்தல் போன்ற பணிகளை யெல்லாம் தாயகம் திரும்பியோர்களுக்கு செய்து வருகின்றனர்.

ஆனால் சில அமைப்புகள், சங்கங்கள் சில 'செல் வாக்குகளை' ஆயுதமாக வைத்துக் கொண்டு தாயகம் திரும்பியோர்களுக்கு சேவை என்ற போர்வையில் சுரண்டிச் சாப்பிடும் வேலையிலேயே ஈடுபட்டு வருகின்றன.

வேலை வாங்கித் தருகிறோம், புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டுத்தருகிறோம், உங்கள் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறோம் என்று அவர்களிடம் நூறு இருநூறு என்று சுரண்டுவதோடு மாத்திரமல்ல: அவர்களை தவறான வழியிலும் இழுத்துச்செல்கிறார்கள்.

அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாய் இவர்களை நம்பிச் செல்லும் தாயகம் திரும்பியோரும் செய்த வேலையை விட்டு, இருந்த இடத்தை விட்டு தெருவுக்கே வந்து விடும் பரிதாப நிலைக்கு ஆளாகிறார்கள்.

இந்த அமைப்புகளுக்கு, சங்கங்களுக்கு வருமானம் பண்ணுவது மட்டுமே குறியே தவிர இவைகளுக்கு, இம் மக்களின் பிரச்சனை தீர்க்க வேண்டும் என்ற நோக்கமல்ல; இவர்களுக்கு பிரச்சனை என்ன எதை எப்படி தீர்ப்பது என்பதெல்லாம் கூட கிஞ்சிதமும் தெரியாது என்பதை சொல்லத்தயங்க வேண்டியதில்லை.

தாயகம் திரும்பியோர் இதை உணர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதோடு, இம்மாதிரியான அமைப்பு சங்கங்களை இனங்கண்டு ஒழிக்கவேண்டும். அப்போதுதான் தாயகம் திரும்பியோர் சமூகத்திற்கு விடுதலை—விமோசனம். O

நெல்லூர் கூட்டுறவு நூற்பாலை :

## மீண்டும் திறக்கப்பட்டது

### தாயகம் திரும்பியோர் வேலை பெற்றனர் !

பெரும் போராட்டத்திற்கு பின் மூடப்பட்ட மில் திறக்கப் பட்டது. வேலை இழந்த தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் மீண்டும் வேலைபெற்றனர்

ஆந்திர பிரதேசம் நெல்லூரிலுள்ள கூட்டுறவு நூற்பாலையில இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் 518 பேர் 1972யில் வேலை பெற்றனர்.

ஆரம்ப காலத்தில் இவர்கள் அங்கு மிகவும் சிரம்பப்பட்டனர்; சம்பளப் பற்றாக் குறை, நோய் நொடி, உள்ளூர் மக்கள் இவர்களை ஏற்றுக் கொள்ளாமை போன்ற பிரச்சனைகளால் சிரமப்பட்டார்கள். காலப்போக்கில் பிரச்சனை எதிர்கொண்ட சிறப்பான வாழ்க்கை பெற்றார்கள். உள்ளூர் மக்களும் பெரும் பான்மையாக இருக்கும் தொழிற்சங்கத்திற்கு இவர்கள் தலைமை தாங்கும் அளவிற்கு இவர்கள் நிலை வளர்ந்து விட்டது.

ஆனால், நூற்பாலையில் நிர்வாகத் திறமையின்மை, ஊழல் காரணமாக நஷ்டம் ஏற்பட்டு இழுத்து மூடும் நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் 12ந் தேதி "லே ஆப்" விடப்பட்டது.

பின்னர் மில் மீண்டும் திறப்பதற்கான அறிகுறியே இல்லை லே ஆப் காலத்தில் அரசின் சார்பில் குடும்பத்திற்கு தலா 20 கிலோ அரிசி மட்டுமே ஒரு முறை வழங்கப்பட்டது. வேறு எந்த சலுகைகளும் நிர்வாகம் செய்யவில்லை. ஆண்களும், பெண்களும் வெளியிடங்களில் தினக்கூலி வேலையையேநம்பி பிழைத்து வந்தார்கள்.

எனினும் வறுமைகாரணமாக உண்ண உணவில்லாது ரெங்கசாமி, தாத்தையா, மகேஸ்ராமையா என்ற மூவர் இறந்தும் போனார்கள்.

தொழிற்சங்கங்களின் எந்தவித நடவடிக்கைக்கும் மில் திறக்கப்படுவதாக இல்லை. இதைத் தொடர்ந்து 2-3-85 அன்று சுமார் 1500 ஆண்களும், பெண்களும் நெல்லூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் சத்தியாகிரகம் இருந்ததைத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதன் பலனாக மில் மீண்டும் திறக்கப் பட்டது.

ஆயினும் தினக் கூலியாக வேலைப்பார்த்த சுமார் 55 தாயகம் திரும்பியத்தொழிலாளருக்கு வேலைமறுக்கப்பட்டதோடு, நிர்வாகம் பிடிவாதமாக நின்றதில் 1983யில் வழங்கிய போனஸில் 10 சதவீதம் பிடித்தம் செய்துக் கொள்வதென்ற முடிவோடு, ஸ்டாஃப்சாக பணி செய்த 80 நபர்கள் சாதாரண தொழிலாளர்களாகவும் மாற்றம் செய்யப்பட்டார்கள். O

## பஸ் வசதிக்காக மறியல் போராட்டம்

பஸ் வசதிக்கேட்டு மறியல் போராட்டம் நடத்துகிறார்கள். இப் போராட்டம் கொடைகானலில் 15 9.85 அன்று நடை பெறஇருக்கிறது

கொடை கானல் நகரிலிருந்து பெருமாள்மலை, ஊத்து, பி. எல். செட், செண்பகனூர், கோராப்பூர், வில்பட்டி, பள்ளங்கி, பூம்பாறை மன்னவனூர் போன்ற இடங்களுக்கு நகரப் பேருந்து விடவேண்டுமென்றும், உல்லாச காலங்களில் வத்தலக்குண்டு பழனியிலிருந்து மேலதிக பேருந்துகள் விட வேண்டுமென்று கோரி பெருமாள் மலைப்பிரிவில் பஸ்மறியல் போராட்டம் நடாத்த இருக்கிறார்கள் O

# அகதிகளாக இருப்போரே அடாவடித்தனம் காட்டுவதா?

"அகதிகள் மத்தியில் சிலர் விஷமிகளாக இருக்கிறார்கள்; இவர்கள் செயலால் இங்கிருக்கும் அப்பாவி அகதிகள், தாயகம் திரும்பியோர்கள் அவதிக்குள்ளாகிறார்கள்; துன்பப்படுகிறார்கள்"

இப்படி புகார்கள் "மக்கள் மறுவாழ்வுக்கு' தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது.

திருச்சி மண்டப முகாம்களில் நூற்றுக்கணக்கான தாயகம் திரும்பியோர்களும், அகதிகளும் தங்கி இருக்கிறார்கள் அகதிகள் மத்தியில் பல இளைஞர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் பொறுப்பற்ற தனமாக நடந்து கொள்கிறார்கள். தம்மை விட வலிமை குறைந்த அப்பாவி அகதிகள், தாயகம் திரும்பியோர்களிடம் தங்கள் ரவுடித்தனங்களை காட்டுகிறார்கள். அடிக்கடி சண்டையிடுதல் கைகலப்புகளில் ஈடுபடுத்தல் போன்ற தகாத செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

பலமுறை போலீசார் வந்து தலையிடும் அளவிற்கு இவர்களின் செயல் இருக்கிறது. 'இலங்கையர்கள் மிகவும் மோசமானவர்கள்-குழப்பம் விளைவிப்பவர்கள்' என்று போலீசார் சுட்டிக்காட்டும் அளவிற்கு சில வேளைகளில் நடந்துக் கொள்கிறார்கள்.

"நாம் ஏன் இங்கு வந்திருக்கிறோம்; நமது எதிர்காலம் என்ன?" என்பது குறித்து எல்லாம் இவர்கள் கவலைப்படுவதாக தெரியவில்லை. தங்களின் கடந்த காலத்தை நினைத்து—தாங்கள் வாழ்ந்த ஊரில் 'பெருமை'யைக் சுட்டிக் காட்டி மிரட்டுகிறார்கள்.

முகாமில் கார்பரேசன் தண்ணீர் வழங்கும் இடங்களில், பங்கீட்டு அரசி வழங்கும் இடங்களில்—மற்றும் பராமரிப்பு பணம் போன்றவைகள் வழங்கும் பொழுதெல்லாம் இவர்கள் முன்னிற்க வேண்டும்; முதலிடம் அளிக்கவேண்டும் என்பது போல நடந்துக் கொள்கிறார்கள்.

அப்பாவிகளான தாயகம் திரும்பியோர்களிடம் இவர்கள் மிக மோசமாக நடந்துக் கொள்கிறார்கள். இங்கும் இவர்களை 'தோட்டக் காட்டான்;' 'கள்ளத்தோணிகள்' என்றெல்லாம் நிந்திப்பதும், கேலி செய்வதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

தாயகம் திரும்பியோர், அகதிகள் மத்தியில் பூர்வீகத்தமிழர், மலையகத்தமிழர் (தோட்டக் காட்டான்-கள்ளத் தோணிகள் என்று இழிவுபடுத்துவது) என்று பிரித்து பேசி இந்த அப்பாவி மக்களுக்கு துன்பம் தருவதால் ஒருவரை ஒருவர் வெறுப்போடு நோக்கும் நிலையை உருவாக்கி வருவது தற்போதைய நிலைமைக்கு சிறப்பானதாக இல்லை."

ஈழ விடுதலைக்கு இருக்கும் ஆதரவையும், போராளிகளுக்கு இங்கு வழங்கும் மரியாதையையும் சீர் குலைக்கும் வகையில் சில விஷமிகள் இம்மாதிரி விரும்பத்தகாத செயல்களை செய்கிறார்கள். ஒன்றும் தெரியாத-எதுவும் முடியாதவர்களாக இருக்கின்ற மக்களுக்கு துன்பங்களையும், சிரமங்களையும் கொடுத்துவருகிறார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் இதை தடுக்க முயலவேண்டும் என்பதோடு முகாம் அதிகாரிகள் இவர்களை இனங்கண்டு அப்புறப்படுத்தவேண்டும். இவர்களால் ஏற்படக் கூடிய பிரச்சனைகளை உணர்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதோடு தாயகம் திரும்பியோர், அகதிகள் நலனில் அக்கறைக் கொண்டு இரக்க சிந்தனையோடு இவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும். ●

# "அகதிகளிடம் அதிகாரிகள் அனுதாபம் காட்டுகிறார்கள் இல்லையே"

"தாங்களும் செய்வதில்லை; மற்றவர்களையும் செய்ய விடுவதில்லை என்ற நிலையில் அதிகாரிகள் நடந்துக் கொள்கிறார்கள். சிறு பிரச்சனைகளைக் கூட பூதாகாரமாக நினைக்கிறார்கள் இவர்கள் செய்ய மறுக்கும் பிரச்சனைகளை மந்திரிகள் மூலமும் கேட்கமுடியாது; வேறு யார் மூலமும் கேட்க முடியாது கேட்டால் குற்றம் என்று கருதி கெடுபிடிகள் செய்கிறார்கள்"

முகாம்களில் தங்கி இருக்கும் தாயகம் திரும்பியோர், அகதிகள் இவ்வாறு வருந்துகிறார்கள்.

முகாம்களில் தங்கி இருக்கும் இவர்களுக்கு நிவாரண உதவிகள் பல அளிக்கப்பட்டு வருகிறது. என்றாலும் இவர்கள் முகம் கொடுக்கும் விடயங்களில் பிரச்சனைகள் ஏற்படும் போதோ, தங்களுக்கு அளிக்கும் நிவாரண-மறுவாழ்வு உதவிகளில் சிக்கல் ஏற்படும் போதோ அதிகாரிகளை அணுகினால் அவற்றை உடனுக்குடன் தீர்ப்பதில்லை அல்லது மறுக்கப்படுகிறது என்கிற குறைகள் பரவலாக உண்டு.

அதிகாரிகளிடம் சென்று சுயமாக பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத பட்சத்தில் இம்மக்களுக்காக சேவை செய்யும் அமைப்புகள், சங்கங்களை அணுகி அவற்றின் மூலம் தீர்க்க முயற்சிக்கிறார்கள்.

சில வேலைகளில் முகாம்களுக்கு மந்திரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி பிரமுகர்கள் வரும் போது அவர்களிடம் மனுக்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளுக்கு தெரிவித்து வலியுறுத்துக்கிறார்கள்.

ஆனால் அதிகாரிகளோ அதைப்பற்றி சட்டை செய்வதில்லை சங்கங்களிடம், மந்திரி முதலானவர்களிடம் சென்றதற்காகவே மேலும் கெடுபிடிகளுடன் நடந்துக் கொள்கிறார்கள் என்று தெரிவிக்கின்றனர். "நீ யாரிடம் போனால் என்ன? நாங்கள் செய்வதைத்தான் செய்வோம்" என்று அதிகாரிகள் தெரிவிப்பதாக வேதனையுடன் தெரிவிக்கிறார்கள்.

இலங்கை இராணுவத்தினரின் சிங்கள குண்டர்களின் கொடுமைக்கும் கொலைவெறிக்கும் பயந்து, பிறந்த மண்ணைத் துறந்து எல்லாவற்றை இழந்து இங்கு வந்திருக்கின்ற இம்மக்களுக்கு உரிய உதவிகள் செய்ய வேண்டியது அனைவரது கடமை.

ஜனநாயகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் குடியியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. அந்த உரிமைகளைப்பெற தங்களுக்கு சேவையாற்றி வரும் அமைப்புகள், சங்கங்களை நாடவோ அல்லது சம்பந்தப்பட்டவர்களை அணுகி அவர்கள் மூலமோ—அமைப்புகளை உருவாக்கிப் போராடவோ ஜனநாயகயுரிமையுமுண்டு.

இந்த உரிமைகளுக்காக சட்டங்களே இடம் கொடுக்கும் போது இவற்றை பயன் படுத்துவதற்காக அதிகாரிகள் சம்பந்தப்பட்டோரை அவர்களுக்கு அளிக்க வேண்டிய உதவிகளை மறுப்பதோ அவர்களை பழி வாங்குவதோ, அவர்கள் மீது கெடுபிடி காட்டுவதோ ஜனநாயகத்திற்கும், மனிதாபிமானத்திற்கும், மனித உரிமைக்கும் புறம்பானதும், வேதனைப்படத்தக்கதுமாகும். ●

# அகதிகள் சொன்ன துயரக் கதைகள்

மரியதாஸ் யோசப்பின், என்ற பெண்மணி. வயது 33. இவருக்கு ஐந்து குழந்தைகள் ஒரு ஆணும் நான்கு பெண்களுமாகும். இவர்சொன்ன துன்பக்கதை:

நாங்கள் மன்னார் பேசாலை 8-ம் வட்டாரத்தில் வசித்துவந்தோம். எனது கணவர் பெயர் அந்தோனி மரியதாஸ் பெரேரா (மறு பெயர்: ஆபரணம்) அவருக்கு வயது 40. கடற்றொழில் செய்து வந்தார்.

2-2-85 அன்று காலையில் தான் சிங்கள இராணுவம் எங்கள் ஊரை சூழ்ந்துக் கொண்டது. சில இராணுவ வீரர்கள் எனது கணவனை அழைத்து, தென்னை மரத்திலேற்றி இளநீர் பறித்துக் குடித்தார்கள். குடித்து முடித்து விரட்டி விட்டார்கள்.

எனது கணவர் ஒரு வீட்டுக்குள் சென்று ஒளிந்துக் கொண்டார். ஆனாலும் அவர்கள் விடவில்லை. வீட்டுக்குள் புகுந்து அவரை இழுத்து வந்து துப்பாக்கியால் சுட்டு கொன்றார்கள்.

கணவரின் உடலை இராணுவ லாரியில் ஏற்றிச் சென்று ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தார்கள். எங்களிடம் உடலை பெற்றுக்கொள்ள விரும்பினால் எனது கணவர் பயங்கரவாதி என ஒப்பமிட வேண்டும் ஒரு பாரத்தை காட்டினார்கள். எனது கணவரின் உடலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னபடி ஒப்பமிட்டு உடலை பெற்று அடக்கம் செய்தோம்.

அதே தினத்தில் அதே வேளையில் எனது கணவரின் தங்கையின் கணவர் அந்தோனிச் சாமி எமிலியான்ஸ் அவர்களையும் இராணுவம் சுட்டுக் கொன்றதாக அறிந்தேன். மேலும் அதே நாளின் ஆனந்தன் எள்பவரையும், இன்னொருவரையும் இராணுவம் சுட்டுக் கொன்ற செய்தியையும் கேள்விப் பட்டேன்.

இதற்கு மேல் அங்கே இருக்க எங்களுக்கு மனம் துணியவில்லை. இரு தினங்கள் கழித்து 24-2-85 அன்று பகல் 2 மணிக்குதலைமன்னாரிலிருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு இராமேஸ்வரம் வந்தடைந்து இங்கே அகதியாக இருக்கிறோம்.

## 2

"நான் காந்திய இயக்கத்தில் தொடர்பு கொண்டிருந்தேன். காந்திய இயக்கம் எனக்கு பல உதவிகள் அளித்திருந்தது. பின்னால் நான் அந்த இயக்கத்தை விட்டு ஒதுங்கி விட்டாலும், காந்திய இயக்கத்திற்கு இராணுவத்தால் சோதனை வந்த போது நானும் பாதிக்கப் பட்டேன்... என்னையும் தேடிப் பிடித்து பல அட்டூழியங்கள் செய்தார்கள். இதனால் நான் எனது வீடு, வாசல், எல்லாவற்றையும் இழந்தேன். இனி அங்கு வாழவே முடியாது என்ற நிலையில் இங்கு அகதியாக குடும்பத்துடன் வந்து சேர்ந்தேன்.

இவ்வாறு ஆர். எஸ். பிரதர் ஸ்டீபன் என்பவர் தெரிவித்தார். 41 வயது நிரம்பிய இவருக்கு மனைவி, ஒருமகனும், மகளும், ஒரு மருமகளும் உண்டு.

இவர் மலையகத்தில் காவத்தை பாவத்தை தோட்டம் நம்பர் 1 யில் பிறந்தார். 18ஆண்டுகள் அதே தோட்டத்தில் வாழ்ந்து பின் 7 ஆண்டுகள் வெளியூரிலும் வாழ்ந்து வந்தார். பிறகு 1977 வன் செயலில் பாதிக்கப்பட்டு கொழும்புக்கு சென்று வத்தளை என்ற பகுதியில் வாழ்ந்தார். 1979யில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து-1981ம் ஆண்டு—தமிழர் பிரதேசத்தில் சென்று குடியமர்ந்தால் ஓரளவிற்கு பிரச்சினை தீரும் என எண்ணி வவுனியாவில் செட்டிகுளம், பாவற்குளம் என்ற ஊரில் சென்று குடியேறினார்.

"அங்கும் பிரச்சனை விட்டபாடில்லை... யாரைச் சொல்லி நொந்துக் கொள்ளவது? இவ்போது அகதிகளாக இங்கே வந்துவிட்டோம்" என்று துயரம் தோய தெரிவித்தார்.

## 3

'எனது மைத்துனர் பெயர் மேராதாசன். அங்குள்ள சென் அனால் ரோமன் கத்தோலிக்க கோவிலில் தினமும் அவர் தங்குவது வழக்கம்.

6-1-85 அன்று காலை கோயிலை இராணுவம் சுற்றி வளைத்து துப்பாக்கி பிரயோகம் செய்தது. இதில் எனது மைத்துனர், இன்னும் பலர் பலியானார்கள். இதில் கோவில் பாதர் மேரி பாப்ரியன் என்பவரும் எட்டு வாலிபர்களும் ஒரு வயோதிபப் பெண்ணும் அடங்குவர்.

இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுப்பவர்கள் தமிழர்கள் என்றே இராணுவத்தினர் கண்டபடி சுட்டுக்கொன்றனர்.

பின் பலியாகி இறந்தவர்களின் உடலை மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டு பின் ஒப்படைத்துவிட்டனர்.

ஆனால் பாதர் உடலை மட்டும் கொடுக்க வில்லை. அவரைக் கொல்ல வில்லை என்பது அவர்கள் வாதம்.

ஆனால்அவர் இறந்ததற்கான ஆதாரமும் உண்டு. அவரின் அறையில் சுட்டு இழுத்துச் சென்றதற்கான அடையாளமாக இரத்தம் தோய்ந்துக் காணப்பட்டது.

இப்படி பல சம்பவங்கள்—கொடுமைகள் அங்கு நடப்பதால்தான் நாங்கள் இந்தியாவுக்கு வந்தோம்."

இராசப்பு பூலோக சிங்கம் என்பவர் இதை தெரிவித்தார். இலங்கையில் கோட்டை மன்னாரைச் சேர்ந்த இவருக்கு மனைவியும், 2 மகள்களும், 2 மகன்களும் உண்டு.

—பேட்டி கண்டு எழுதியவர்

**எம். மோகன்**

வெளிவந்து விட்டது

**வண்ணச் சிறகு கவிதைகள்**

விலை: ரூபா 7.50

கிடைக்குமிடம்:

**மலை அரசி பதிப்பகம்**

12, பஜனைக் கோயில் தெரு, புலியூர் புரம், கோடம்பாக்கம், சென்னை-600 024.

மே தினச் சிந்தனைக்கு :

## ஒற்றை நெற்கதிர்

-:வண்ணச் சிறகு:-



இவன்,
உதயக் கதிர்வீச்சு
உலகைத் தழுவு முன்
உழைக்கச் செல்வான்

O

உழைப்பு உதிர்க்கும்
வியர்வை ஊற்றில்
பண்ணை வயல்களை
பசுமையாக்கி,
பசிவிழிகள்
பரிதவிக்க,

O

பண்ணை முற்றத்தில்
ஒட்டிய வயிரோடும்
ஒற்றைக்கால் தவமிருந்து
பெற்ற தென்னவோ
ஒற்றை நெற்கதிர் தான்

# உலகம் எங்கினும் மேதின விழா! உழைப்போர் உயர்வுக்கு தூளுரைப்போம்!

மே முதல் தேதி மே தின விழா உலகெங்கினும் கொண்டாடப் படுகிறது. மே விழா சில நாடுகளில் தேசிய திரு நாளாகவும் இன்னும் சில நாடுகளில் உரிமைக் குரல் எழுப்புப் தினமாகவும் தொழிலாளர்கள் இத்தினத்தை கொண்டாடுகிறார்கள்.

8 மணி நேர வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் என்னும் அடிப்படை உரிமைகளை முன் வைத்து அமெரிக்க உழைக்கும் வர்க்கம் போராட்டத்தில் இறங்கிய சம்பவத்தை நினைவு கூறுவதே இவ்விழாவின் நோக்கமாகும்.

அன்று இந்த கோரிக்கைகளை முன் வைத்து போர்க் குரல் எழுப்பிய அமெரிக்க தொழிலாளர்கள் ஆளும் வர்க்கத்தின் அச்சுறுத்தலுக்கு பெரிதும் ஆளாகியது என்றாலும் இன்று தொழிலாளர்களின் வேலை, வேலை நேரம், ஊதியம், மேலதிக நேர வேலை ஊதியம் ஆகிய அடிப்படை உரிமைகளுக்கு அன்றைய அமெரிக்க தொழிலாளர்களின் தியாகமே அடிகோலயுள்ளது என்பதை மறக்க முடியாது.

நம்நாட்டில் தொழிலாளர்களுக்கு மே தினம் விடுமுறை தினமாக இருக்கிறது. ஆனால் அனைத்து மட்டத்திலுமுள்ள தொழிலாளர்க்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாக இல்லாதிருக்கிறது. ஒரு தேசிய விடுமுறை தினமாகவும் இத்தினம் கடைபிடிக்கப்படுவதில்லை.

ஐரோப்பாவில் இயந்திரப் புரட்சி தோன்றியதால் வேலையில்லாத் திண்டாட்டம் வேலைப்பளு கூடியதால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் இயந்திரங்களை உடைத்துத் தள்ளினார்கள், ஆனால் காலப்போக்கில் நிலைமை மாறியது. இயந்திரப்புரட்சிக்கு ஈடு கொடுத்து, தொழிற்சாலைகளை கட்டி வளர்த்து, உரிமைகளையும் பெற்றுக் கொண்டனர். பலமான தொழிற்சங்க இயக்கங்களை கட்டி வளர்த்த தன் மூலமாகவே இச்சாதனையைப் புரிய முடிந்தது.

ஆனால் நம் நாட்டிலுள்ள நிலமை முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கிறது. எங்கும் வேலை நிறுத்தங்கள். இதனால் கோடிக்கணக்கணக்கான உழைப்பு தினங்கள் விரயமாகிறது. கதவடைப்புகளால் நிறுவனங்கள் மூடிக்கிடக்கின்றன: அரசாங்கத்தால் இவைகளை தீர்த்து வைக்க முடியவில்லை லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்களில் சேருவதற்கு வாய்ப்பில்லை. ஒழுங்கற்ற (Unfair Labour Practice) தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் காண முடிகிறது.

நாடு சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால் நமது தொழிலாளர்களோ 'இதுதான் சுதந்தரமா' என்று ஏக்கமுறுகின்ற—விரக்தி மனப்பான்மை கொண்டுள்ளனர். ஐரோப்பாவில் இயத்திரப் புரட்சியை கண்டு ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் இயந்திரங்களை நொறுக்கித்தள்ளிய நிலையில் நமது தொழிலாளர்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். தொழிற்சங்கங்கள் பலங்குன்றியும் பிளவுபட்டும் காணப்படுகின்றன.

**செ. கலியபெருமாள்**

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பொது வேலை நிறுத்தங்கள் எதுவும் வெற்றி பெறவில்லை. நம் நாடு நமது அரசு நமது இனம் என்ற கோஷங்கள் வளர்ந்து விட்ட நிலையில் பொது வேலை நிறுத்தங்கள் நடந்தால் வெகுஜன ஆதரவைப் பெற முடிவதில்லை. விடுதலை பெற்ற இதர ஆசிய நாடுகளிலும் இதே நிலையைத்தான் காண முடிகிறது. எனவே தொழிற்சங்கங்கள் புதிய அணுகுமுறையை பின்பற்றியாக வேண்டும். இத்தகைய புதிய அணுகுமுறையை தொழில் சொந்தக் காரர்களும் கூட பின்பற்ற வேண்டும். முத்தரப்பிற்குமிடையே விரிசல்கள் போக்கப் படல் வேண்டும். நாட்டின் ஒட்டுமொத்த நலன் கருதி இப்புதியஅணுகுமுறையை முத்தரப்பினரும் பின்பற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டால், நிச்சயமாக பிரச்சனைகள் அதாவது தகராறுகள் குறைந்து முத்தரப்பினரும் நலன்பெற வாய்ப்புகள் உண்டு.

நமது நாட்டில் அரசியல் கட்சிகளின் ஈடுபாடுகளிலிருந்து தொழிற்சங்கங்களை விடுவிக்க பிரயத்தனப்படுவது வீண் முயற்சியாகும். எவ்வித காழ்புணர்ச்சியுமின்றி தொழிற்சங்கங்களை ஊக்குவிக்க-பலப்படுத்த அரசும் தொழில் சொந்தக்காரர்களும் அக்கரை செலுத்தவேண்டும்.

இதே போல் கலப்பு பொருளாதார அரசியலையும் ஜனநாயக கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டுள்ள ஒரு நாட்டில் வர்க்கப் போராட்டம் என்னும் வலையத்திற்குள்ளேயே சுற்றி வந்து கொண்டிருப்பதில் விவேகமான செயல் அல்ல என்பதை தொழிற்சங்க இயக்கங்கள் புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்,

ஒரு ஜனநாயக நாட்டில் தொழிற்சங்கங்களைபரவலாக்கி—மேற்கத்திய நாடுகளில் உள்ளதுபோல் தொழிற்சங்கங்களை பலம் பொருந்திய இயக்கங்களாக ஆக்க அனைத்து சாத்திய கூறுகளும் இருப்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அரசு, தொழில் சொந்தக்காரர்கள், தொழிற்சங்கங்களுக்கிடையே உள்ள போட்டிகளில் தொழிற்சங்கங்கள் முதலிடத்தை எட்டிப் பிடிக்கக்கூடியவகையில் நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் ஆராய முன்வர வேண்டுமென்பதே இம் மேதினத்தில் நாம் விடுக்கும் செய்தியாகும். O

# தாயகம் திரும்பியோர்-அ

இன்று இந்தியாவில், தாயகம் திரும்பியோர்களும், அகதிகளும் ஐந்துலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர். இப்படி இவர்கள் நாடு கடத்தப்படுவதின் காரணங்கள் இதுவரை தெளிவாக கிடைக்கவில்லை. ஆயினும் இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிந்து கொண்டே வருகின்றது.

இவர்கள் இப்படிப் பட்ட துன்பத்தில் வாடுவதும், இதிலிருந்து விடுபடவும், தாங்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் வழிகளைக் காணவும், தங்களின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் வகையில் வழிவகைகளை அமைத்துக் கொள்ளவும் இவர்கள் மீது அக்கறை கொண்டுள்ள தனி நபர்கள் அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் மக்கள் இயக்கங்களின் உதவிகளை எதிர் பார்ப்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

இம்மக்களின் இவ் அவல நிலைகளிலிருந்து இவர்களை விடுவிக்க முயற்சி செய்பவர்கள் இம்மக்களின் பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்தி, வாழ்க்கை நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்க முற்படுகிறார்கள். ஆனால் இம்மக்களின் இவ்விதமான சூழ்நிலைக்குக் காரணங்கள் என்ன, எந்த சூழ்நிலை இவர்களை இந்நிலைக்கு தள்ளியது, இவர்களின் துன்பங்களுக்கான காரணம் என்ன என்றும் ஒரு முழுமையான ஆய்வை செய்து பார்க்காமல் விட்டு விடுகிறார்கள் என்பதுதான் விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கின்றது.

மனித சமுதாயம் என்பது முழு உருக்கொண்ட ஒரு பொருள் அல்ல; மாறாக பல அங்கங்களைக்கொண்ட அதன் சூழ்நிலையில் பலவித சக்திகளினாலும், பலதரப்பட்ட உள் முரண்பாடுகளின் அழுத்தத்தாலானது அதன்மீது செலுத்தப்படும் அழுத்தங்களையும் தாங்கிக்கொள்ளும். இப்படிப்பட்ட பல சக்திகளுக்கிடையே ஒரு சம நிலையை உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகளின் பலன்களை உடனடியாகவோ, காலம் கடந்தோ கண்டு கொள்ளும். நாம் பேசிக்கொண்டிருக்கும் இச்சமுதாயத்திற்கு இப்படியான எல்லா பலன்களும் நன்மையைத் தந்து விடுவது அல்ல அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுவதும் அல்ல. ஆகையினால் தான் தற்காலிகமாக இப்படி நடைபெறும் மாற்றங்கள் அதன் எதிர்காலத்திற்கு பாதகமாகவும், அழிவுக்கான ஒரு செயலாகவும் இருக்



ஒண்டுவதற்கு ஓர் இடம் கிடைத்துவிட்டது. உண்டிக்குத் தான் வழியைக் காணோம். எதிர்காலத்தை எண்ணியேங்கும் தாயகம் திரும்பியோர். (நீலகிரியில்)

கும் என்பதை தெரிந்து கொள்வது அதி முக்கியமானது என்பது குறிப்பிடப்படுகின்றது.

ஆகையினால் தான் இப்படிப்பட்ட அல்லறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்ற முயலும் அனைவருக்கும் நாம் ஒரு எச்சரிக்கையை விடுவிக்க விரும்புகிறோம். அத்தோடு இந்த மக்களின் இந்நிலையினுக்காக பலதரப்பட்ட காரணங்களைக் கண்டறிவதும் இவர்களின் எதிர்கால நடவடிக்கைகளை தீர்மானிப்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை திடமாக கூறுகிறோம்.

ஆகவே இம்மக்களுக்கு உதவு முகமாக எடுக்கப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் இவர்களின் இந்த மனிதாபிமான மற்ற சங்கடங்களுக்கான மூல வேர் என்பது என்ன என்று கண்டுப் பிடிப்பதுவும் அதைக் களைய முன்வைக்கக் கூடிய மூல மருந்து என்பதையும் கண்டு பிடிப்பதே கடைசி நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த மனிதர்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும். இப்படிப் பட்ட அவல நிலைக்குள்ளாக்கப் பட்ட இம்மக்களின் இந்நிலைக்கான மூல காரணங்களை தெரிந்துகொண்டிருக்காவிட்டாலும் அவர்கள் இம்மக்களின் துன்ப, துயர, பரிதாப நிலையை காணாமல் இருக்க முடியாது, ஆகவே தான் எந்த ஒப்பந்தம் அவர்களைக் கொண்டு வந்ததோ அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். தாயகம் திரும்புவோர்களுக்கான ஒப்பந்தங்களின்படி இவர்களுக்கு பல உரிமைகள் சொல்லப்பட்டுள்ளன. அவைகளைப்பெற்றுக்கொள்வது அல்லது வழங்குவது பொருத்தமாகும்.

தாயகம் திரும்புவோருக்கு கொடுக்கப் பட்டுள்ள உரிமைகள் தாயகம் திரும்புவோர் ஒப்பந்தப்படி அறிவிக்கப்பட்டவையாகும் என்பதும், இது மனித சமூகத்திற்கு தேவைப் பட்டவைகள் என்பதும் இது குறிப்பிட்ட ஒரு சிறுபான்மையினருக்கு மட்டும் தேவைப்பட்டது அல்ல என்பதுவும் புரிந்து கொள்ளவேண்டிய ஒன்றாகும். இந்த உரிமைகள் பெரியளவில் மறுக்கப்பட்டிருக்கும் தறுவாயில் அவைகளுக்காக போராடுவதுதான் முறையானதாகும். இப்படிப்பட்ட போராட்டங்கள் சமூக அரசியல் நிலைபாடுகளிலிருந்து விலகி நிற்க முடியாது. இப்படிப்பட்ட விசித்திரமான இந்திய சமூக அரசியலமைப்பில் சர்வதேச சாதிய அமைப்புகளுடன் பின்னப்பட்

## நிர்மலன்

டதாகும். தலைமுறை தலைமுறையாக பாதுகாக்கப் பட்டு நிறுவன மயமாக்கப்பட்டு அரசினால்கட்டிக்காத்துவரும் நிலையிலும் கூட இப்படிப் பட்ட மோதல்கள் காணக் கூடியதாயுள்ளது.

இது சிறுபான்மை இனத்தவரின் தார்மீக உரிமைகளுக்கான கோரிக்கைகளை மறுப்பதாகாது. ஆனால் இவ்வகையான உரிமைகள் கோரப்படும் போது ஏற்படும் மோதல்கள் அதனால் ஏற்படும் பலாபலன்கள் பற்றியே இங்கு பேசப்படுகின்றன. தற்போதுள்ள சமூக அரசியல் அமைப்பின்படி இப்படி பெறப்படும் உரிமைகள் முழுமையான நிலையிலிருந்து பார்க்கையில் உதவிகள் பெற்ற ஒரு சமூக தோற்றத்தைக் கொடுக்கும்.

இப்பெரும் பிரச்சினை தீர்க்கப் படுவதற்குப் பதிலாக சமூகங்களின் ஒருமைப் பாட்டை கடந்த 20 வருடங்களாக குலைத்து விட்டது.

இந்த பிரச்சினைப் பற்றிய

# கதிகள்: உரிய உரிமைகள்

நமது ஆய்வு, நடைமுறைப் படுத்தும் போது அவைகளுக் கிடையே சிக்கல்களை எதிர் நோக்கும் இரண்டு தீர்வுகளை களை முன் வைக்கிறது.

இவர்கள் இந்தியாவில் குறைந்த பட்ச தாராதரத்து டன் வாழ்வதற்கு வகை செய் யும் வகையில் இந்த ஒப்பந்தங் களில் தொழில், தொழில் கடன். விட்டுக் கடன் மற்றும் கல்வி போன்றவற்றில் முன்னுரிமை கள், சலுகைகள் போன்ற உத் தர வாதம் அளிக்கப்பட்டுள் ளது. ஆனாலும், இந்த உதவி கள் இம்மக்கள் வாழ்ந்த வாழ்க் கையைத் துறந்து - நிரந்தர தொழிலை விட்டு - வாழ்ந்து பிறந்த 'தாய்' நாட்டை விட்டு இந்தியா போகத் தீர்மானிக் கும் ஒரு உந்து சக்தியாக


## ...ன் தாஸ்

பயன் படுத்தப்பட்டுள்ளது. தாங்கள் இந்த வகையான மறு வாழ்வுத் திட்டத்தில் திருப்தி யடையாத பட்சத்தில் தங்கள் 'தாய் நாடு'க்கு திரும்பிப் போக முடியாமலும் இருக்க வழி செய் யும் தந்திரோபாயமும் ஆகும். மேலாக ஒரு அரசியல் பிரச் சனை என்பதையும் மழுங்க டிக்க வைப்பது ஆகும்.

இம்முயற்சி இம்மக்களுக்கு திருப்தி தரக்கூடிய வகையில் மறுவாழ்வு அளிக்கவில்லை. என்பது ஒரு புறமிருக்க, இவ் வகையின மறுவாழ்வு திட்டங் கள் உள்ளூர் மக்களிடையே பொறாமையை ஏற்படுத்தியுள் ளது. ஏனென்றால் உள்ளூர் மக்களுக்கு மறுவாழ்வு உதவி கள் அளிக்கப்படவில்லையே.

ஆகையால்தான் நாம் முன் கூறிய தீர்வுகள் என்பதில் ஒன்று இப்படிப்பட்ட விசேட சலுகைகள் நிறுத்தப்பட வேண் டும் என்பதும் அவர்கள் நீதி கேட்டு போராடுவது தடை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அப்போது தான் உண்மையாகவே அவர்கள் தங் கள் நிலைப்பாட்டை வெளிக் கொணர்வதற்கு தேவை ஏற் படும். அதற்கேற்றவாறு அவர் களின் மறுவாழ்வுக்கான திட் டங்கள் அமைப்பதில் சக்தியை பயன் படுத்துவதிலும், அப் போதுதான் அவர்கள் ஒப்பந் தப்படி உறுதியளிக்கப்பட்ட மறுவாழ்வு திட்டங்களை பெறு வதில் உரிமையுள்ளவராவர்.

திரும்பிப் போவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டி ருப்பினுங்கூட பல வழிகளில் இலங்கை அரசால் தூண்டி விடப்படும் அல்லது நடத்தப்



கொடைகானலில் மீண்டும் இவர்கள் உழைக்கத் தொடங்கி விட்டார்கள். தாயகத்தில் இவர்கள் வாழ்வு என்னவோ கோடை கானலாகத்தான் இருக்கிறது

படும் கலவரங்களால் இந்நாட் டுக்கு தாங்களாகவே ஓட்டம் பிடித்துக் கொண்டிருப்பதால் திரும்பிப் போக தயங்குகிறார் கள்.

இரண்டாவது தீர்வு இப்ப டிப்பட்ட சலுகைகளை வறு மைக் கோட்டுக்குகீழ் இருக்கும் அனைத்து இந்தியக் குடி மக்க ளுக்கும் வழங்குவது. இப்படிப் பட்ட நடவடிக்கைகள் சமூகத் திலுள்ள ஏற்ற தாழ்வுகளை கலைக்கவும், ஒருமைப்பாட்டை வளர்க்கவும் உதவும். இவ்வகை யான தீர்வுகளை நடைமுறை யாக்கும் பொழுது குறிப்பட்ட அளவு சக்தியை விரயமாக்க நேரிடும். இதனால் இது கற்பா னாவாத அல்லது நடை முறைக்கு ஒவ்வொத விடயமா கவும் தென்படலாம்.

இப்படி தங்கள் நாட்டிலி ருந்து குடிப்பெயர்ந்துகொண்டு வரப்பட்ட மக்களின் வாழ்க் கையை எப்படி சிறிது முன் தள் ளுவது அதற்காக பல நல் எண் ணங்கொண்டவர்கள் தங்கள் சக்தியையும், கவனத்தையும் செலுத்தி போராடிக் கொண்டி ருக்கிறார்கள். இவர்களின் இத் துணை முயற்சிகளுக்குப் பின் னும் அவர்களின் வாழ்க்கை யாறவில்லை; மாரவில்லை.

ஆகவே சம்பந்தப்பட்ட நபர் கள் சங்கங்கள், நிறுவனங்கள் இயக்கங்கள், நிறுவனங்கள் இயக்கங்கள் ஒன்று பட்டு இம் மக்களின் வெற்றிக்காக வேலை செய்வது—

1. இன்று இலங்கையில் நடக்கும் இனக்கலவரங்களுக்கு அந்நாட்டு மக்களிடையே ஒரு மைப்பாடு கிடையாது. சாதீய சமய வாதங்கள் நிறுவனப்படுத் தப்பட்டுள்ளதும் ஆகும்.

2. இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு துரப்பப்பட்டு தாயகம் திரும்பியோர் என்று கூறிக்கொண்டு இந்தியாவில் அலையும் இத்தமிழர்களே இவ் வகையான மொழிவாதத்தின் முதல் தாக்குதலுக்குள்ளான வர்கள்.

3. இந்த மனிதர்கள் யதார்த் தத்திற்கப்பாற்பட்ட ஒருஒப்பந் தத்தின் கீழ் கப்பலில் ஏற்றப் பட்டு இந்தியாவுக்கு அனுப்பப் படுபவர்கள் உண்மையிலேயே தங்கள் சொந்த நாட்டிலிருந்து நாடு கடத்தப் படுபவர்கள் ஆவர்.

4. இதே சாதீய சமூக, சமய நிர்ப்பந்தத்தால் நாடு பெயர்த்து ஓடியவர்கள் தாய் நாட்டிற்கு திரும்பியது போல் இவர்கள் தங்களின் சொந்த நாட்டிற்கு திரும்பிபோகும் தகைமை தற் போதய நெருக்கடிக்கான தீர்வி லேயே உள்ளது.

5. இப்படிபட்ட தீர்வுகளில் காணப்படுவது அவர்களின் தாய்பூமி, பல அரசுகளாக, அங் கிருக்கும் உற்பத்தி முறைக்கே ற்ற வகையில் அமைந்தால் அதி லும் மலைநாடுகுடிகள் என்பது வும் அந்த அரசின்கீழ் தாங்கள் அந்நாட்டின் குடிகள் அந்த நாட்டுக்கே அவர்கள் திரும்பிப் போக, அவர்கள் தேர்ந்தெடுத் தால், உரிமையுள்ளவர்களா வர்.

அப்படிப்பட்ட அரசுகள் ஒரு தேசிய யூனியனாக முறையான நிர்வாக வசதிக்காகவும், ஒருங் கிணைப்புக்கும், சந்தைப் படுத் தலுக்கும் ஏற்ற வகையில் அமை யப்பெறும்.

6. இந்த வகையான தீர்வு காண வேண்டுமாயின் சம்பந் தப்பட்ட நபர்கள் ஒன்றோ அல் லது பல அரசியல் அமைப்பாக இருந்து தீர்வுக்கான இப்படிப் பட்ட கோரிக்கைகளை வைப்ப தில் தகுதியுடையவையாகவும் இயுக்க வேண்டும். அதே வேளையில் இப்படிப் பட்ட தீர்வு காண்பதில் தேசிய, சர்வ தேசிய சமூக சக்திகளை கண்டு பிடிக்கவும், ஒன்று சேர்க்கவும் தகுதி வாய்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

இவ்விடயத்தில் அக்கரை யுள்ள, தகுதிவாய்ந்த, ஆர்வ முள்ள பலர் சமுதாயத்தில் இருக்கின்றனர். அவர்கள் முயற் சியில் ஈடுபட்டு இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு எங் களின் வாழ்க்கையை பூர்த்தி செய்ய முயற்சிப்பார்கள் என நம்புகிறோம்.

ந

# இலங்கையின் தேசிய இனச்சிக்கலும் மலையக மக்களும்

## ( 4 )

இலங்கையின் பூர்வீகத் தமிழ் மக்கள் தங்களுக்கென்று ஓர் அரசையும், அரசுக்குட்பட்ட ஓர் பூகோளப் பரப்பையும் கொண்டிருந்தனர். அவ்வாறு ஓர் அரசும், அரசுக்குட்பட்ட பூகோளப் பரப்பும் மலையகத் தமிழ் மக்கள் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கும் போது மலையகத் தமிழ்மக்களை ஒருதேசிய இனம் என்று எப்படிக் கூறமுடியும்? அப்படிக் கூறுவது என்றால் அது சுத்த அபத்தமாக இருக்காதா? அவர்களைப் பூர்வீகத் தமிழ் மக்களிலிருத்து பிரித்து வைக்கும் துரோகத்தனமாக இருக்காதா?

இப்படித்தான் மலையகத் தமிழ் மக்கள் ஒருதேசிய இனம் என்று வாதிடுபவர்களைப் பார்த்து, எதிர்த்தரப்பினர் தம் கோபக்கனலை, மார்க்சிய வழிப்பட்ட வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். இப்படி கேட்பது ஒன்றும் தவறு கிடையாது. நாம் தர்க்கத்தைத் தொடர்வோம்-

**ஓர் இனத்தின் பூகோளப் பரப்பை எப்படி வளரயறுப்பது? அதன் அரசியல் எல்லைகளை எப்படி வரையறுப்பது?**

இன்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் பூர்வீகத் தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் ஆவர். இதனை 'மகாவம்சம்' என்று சிங்கள இலக்கிய வரலாற்று நூல் கூறுகின்றது.

பூர்வீகத் தமிழர்கள் வடக்கு; வடகிழக்கிலும், சிங்கள மக்கள் தெற்கிலும் இலங்கையில் குடியேறினர். இந்த இரண்டு இனங்களுக்கும் இடையில் மிகத் தொடக்கக் காலத்தில் தொடர்பிருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆனால் இரண்டு இனங்களும் இரண்டு வெவ்வேறு பூகோள சுற்றுச் சார்புகளைக் கொண்ட நிலப் பரப்பில் நிலைத்துப் போயின. அங்கே அவ்விலங்கள் உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் தத்தமது அரசுகளை நிறுவிக் கொண்டனர்.

பூர்வீகத் தமிழர்கள் யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களிலும் கிழக்குப் பகுதிகளிலும் தமது நிலப்பிரபுத்துவ அரசுகளை நிறுவினர். அவ்வாறே சிங்கள மக்களும் பல சிற்றரசுகளையும், கோட்டை (கொழும்பு) அரசையும் நிறுவினர்.

இவ்விரு இனங்களும் ஒரே அரசின் கீழ் அப்போது இல்லை. ஒவ்வொரு இனமும் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளைக் கொண்டிருந்தன. அவ்வவ் அரசின் வீச்சு எவ்வளவு பூகோளப் பரப்பைக் கொண்டிருக்க முடியுமோ, அவ்வளவு பரப்பை பெற்றிருந்தன. ஆனால் குறிப்பான ஒரு எல்லைக்கோடு அப்போது கீறப்பட்டிருக்கவில்லை. நிலப்பிரபுத்துவ அரசு ஆதிக்கத்தின் வீச்சுக்கு ஏற்ப புதிய நிலப் பரப்பில் தத்தமது இன மக்களைக் குடியேற்றுவது, குடியிருப்புகள், கோயில்கள், கோட்டைகள், நினைவுச் சின்னங்கள், கலாச்சாரப் பதிவு கல்வெட்டுகள் ஆகிய இவற்றை உருவாக்கினர். இவையெல்லாம் அப்போதிருந்த நிலப்பிரபுத்துவ அதிகாரத்தின் அதாவது அரசு எல்லைகளாக-விரிவாக்கத்துடன் நடந்தேறின. இலங்கையில் குடியேறிய இரண்டு இனங்களும் தத்தமது தகுதிகளுக்குஏற்ப இவற்றை நிகழ்த்தின. இந்த தகுதி அவர்களின் உற்பத்தி இயக்கப் போக்குடன் சம்பந்தம் கொண்டிருந்தன. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியே இவற்றைத் தீர்மானிக்கும் சமூகக்காரணியாக செயல்பட்டன. அப்போதிருந்த உற்பத்தி முறை அடிப்படையாக அமைந்தன.

இவ்விதம் செயல்பட்ட இரண்டு இனங்களின் நிலப்பிரபுத்துவ அரசுகளும் தத்தமக்குள் அடிக்கடி சண்டை யிட்டுக் கொண்டன. அவை பெரும் போர்களாக வெளிப் பட்டன. அரசியல் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன.

ஆக மொத்தத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு முந்திய வரலாற்றுக் காலக் கட்டத்திலும் இனங்களின் பூகோள எல்லைகளைத் தீர்மானிப்பதில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தீர்மானகரமான பங்கை வகிக்கின்றன. அவ்வாறே நிலப்பிரபுத்துவ அரசு நடத்திய யுத்தங்கள் அரசியல் எல்லையை வரையறுப்பதில் தீர்மானகரமான பங்கை வகிக்கின்றன.

**மலை அரசி**

முதலாளித்துவ சகாப்தம் தோன்றியதும் இது நிலப்பிரபுத்துவ அரசியல் எல்லைகளை முதலில் உடைத் தெறிந்தது. குறிப்பிட்ட ஒரு இனத்தின் சிற்றரசுக்கு உட்பட்ட பூகோள எல்லைகளையும் உடைத்தெறிந்தது.

காலனிய ஆதிக்கம் நிலப்பிரபுத்துவ அரசு எல்லைகளை உடைத் தெறித்தது மாத்திரமல்ல, ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற பலநாடுகளில் பூகோள எல்லைக்கோடுகளை அப்புறப் படுத்தியது. தனது காலனிய ஆதிக்கத்தின் மையப்படுத்தப்பட்ட அரசின் கீழ் புதிய நாடுகளை சிருஷ்டித்தது. அவ்விதமே இலங்கையிலும் அது செயல்பட்டது.

இதனால் புதிதாக முதலாளித்துவ உலகத்தில் பிரவேசித்த நாடுகளில் மீண்டும் இனங்கள் தமக்குள் முரண்பட்டுக் கொண்டன. தங்களது பழம் பெருமைகளை, நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் தாம் பெற்றிருந்த பூகோளப்பரப்பை வெளிப்படுத்தி 'பாரம்பரிய பிரதேசம்' என்ற கருத்தை உருவாக்கின. அவற்றுக்காக போரிட்டுத் தத்தமது 'தேசியங்களை' உருவாக்கிக் கொண்டன. இதற்கான உதாரணங்கள் வரலாற்றில் அநேகம் உண்டு.

தொழில் துறை, மூலதன வளர்ச்சி ஆகியவை குறிப்பிட்ட ஒரு இனத்தை முன்னுக்குக் தள்ளி விட்டபோது அவ்வினம் இதர இனங்கள் மீது தமது ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும் போது அங்கே தேசிய இனக் கிளர்ச்சிகள் தொடர்ந்தன.

காலனிய ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில் முதலில் பல இனங்களும் ஒன்று கூடிக் காலனிய ஆதிக்கத்தை எதிர்த்து தேச விடுதலைப் போராட்டங்களை நடத்தின. அப்போது அந்த குறிப்பிட்ட நாட்டின் தேசிய இனச் சிக்கல்கள் பிரதான இடத்தைப்பெறவில்லை. ஆனால் நாடு சுதந்திரம் அடைந்ததும் மீண்டும் தேசிய இனச் சிக்கல்கள் தலை தூக்கின. ஒவ்வொரு இனமும் தத்தமது நிலப்பிரபுத்துவ காலப் பூர்வீக பூகோள எல்லை பற்றிப் பேசத் தொடங்கின. ;இதற்குச் சான்றாக அப்போதிருந்த அரசியல் எல்லைகளைக் குறிப்பிட்டன.

இவ்வாறாக வரலாற்றுக் கால கட்டங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கே உரித்தான கிக்கல்கள் மனித குலத்தின் முன் நிறுத்தியுள்ளன.

இலங்கையின் மலையகப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட இந்தியத் தமிழர்கள் 150 ஆண்டு கால வரலாற்றையே கொண்டுள்ளனர். இவர்களுக்கென்று அங்கே ஓர் அரசு (நிலப்பிரபுத்துவ அரசு) இருந்ததில்லை. இவர்களுக்கு என்று பூர்வீக (2000 ஆண்டு கால வரலாறு கொண்ட) பூகோளப் பிரதேசம் இல்லை. அவ்வாறெனில் இவர்களை எப்படி இலங்

[10-ம் பக்கம் பார்க்க]

# நாட்டுப்பாடல்கள் விரவிய இலங்கை மலையகத் தமிழர் கதை....

டி. எஸ். ராஜ்

மோட்டார் வண்டிக்கு வருவதற்கு முன்னால் சக்கரம் பூட்டிய வண்டிகளை மாடுகளும் குதிரைகளும் தான் இழுத்தன. அத்தனைக் காலமும் மாட்டு வண்டிகள் குதிரைகள் தான் பொருட்களை ஏற்றிச் சென்றதோடு தபால் முதலான அரசாங்க வேலைகளுக்கும் பயன் பட்டன.

அதே வேளையில் மலையும் மலையும் சார்ந்த தோட்ட புறங்களில் வேலை தளங்களில் இருந்து கொழுந்து மூட்டைகளையும், விறகுகளையும் மற்றைய இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இரு மலைகளிலும் கம்பிகள் தொடுத்து அவற்றின்மீது பொருட்களை இழுத்து கொண்டு செல்லும் முறையை கையாண்டார்கள். இப்போதே இரு மலைகளையும் இணைக்கிற பெரிய பாலங்களில் மாடுமில்லாமல், குதிரையுமில்லாமல் மனிதனும் இல்லாமல் வண்டிகள் மாயமாய்ப் பறக்கின்றனர்.

ஆறுவண்டி நூறு சத்தம்
அறுபத்தாறு ரெயிலு வண்டி
ஏறுதடி நீலகிரி
எவ்வளவு லேசாக

இந்த வண்டிகளில் பெட்டிகள் ஒன்றா இரண்டா? பல பெட்டிகளைப் பூட்டி கொண்டு லேசாக உயரத்தில் ஏறுகிறது. இறக்கத்தில்-பள்ளத்தில் இறங்குகிறது.

"கோச்சு மேலே கோச்சு வரும்
கொழுந்துக் கோச்சு முன்னே வரும்
சாமான் கோச்சியிலே...,
கண்டிகளோ என் சாமிய"

மோட்டார் வண்டிகள் வருவதற்கு முன்னாலே (1904 ஆம் ஆண்டுதான் மோட்டார் இலங்கையில் புழக்கத்திற்கு வந்தன) முன்னாலேயே இலங்கையில் புகை வண்டிகள் வந்து விட்டன. மலை நாட்டில் இந்த வண்டி போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதே கொழுந்து ஏற்றுவதற்கும் தேயிலைப் பெட்டிகளை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்குமேயாகும்.

"பெரிய துரை காலத்திலே
பேய் குதிரை சவாரி
சின்ன துரை காலத்திலே
சிம்மம் போல மோட்டாரு"

புகை வண்டி போக்குவரத்துக்கு பின்னால் தான் மோட்டார் வண்டிகள் பழக்கத்திற்கு வந்தன.

"பெற்றோல் டங்கி யேந்தி
... ... ... வருகுதடி
மோட்டார் வந்து மோதிபுடும்
ஒதுங்கி நட ஓரத்திலே

இந்த விநோதமானவாகனத்தைக்கண்டு ஆரம்பத்தில் எல்லோருக்குமே பயந்தான் தூரக் கண்டாலே ஒதுங்கி ஓடுவர்,

"அடுத்திருக்கு டேசன்
துடுக்கா நடந்து வாடி
பிரைசு பெற்றமவ
துருமெயிறு ஏறி போவோம்"

முதல் முதலில் மலை நாட்டில் ஆரம்பிக்கப் பட்ட புகை வண்டி போக்குவரத்து தோட்டங்களில் பொருளாதாரத்தைப் பெருக்கும் நோக்கமாகவே ஆரம்பிக்கப்பட்டது. பின்னால் தான்மக்களும் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

"ஸ்டோரும் கட்டியாச்சு
இஞ்சினீரும் பூட்டியாச்சு
இளவட்டப் பெண்டுகளா
இலை பொறுக்க வந்திடுங்கோ,

"ஆடுதய்யா இஞ்சின்னிரு
அரைக்குதய்யா செம்பு ரோதை
ஓடுதய்யா வாருகளும்
ஒழிஞ்சிருந்து பாருங்க ய்யா'

தேயிலை தோட்டங்கள் உருவாக ஆரம்பகாலத்தில் தேயிலை பதனிடவோ அரைத்துக் தூளாக்கவோ சாதனங்கள் எதுவுமில்லை. குடிசை முறையில் வாட்டமெடுத்து கரத்தால் அரைத்து சலித்து தேயிலைத் தூள் தயாரித்தார்கள்.

இலங்கையின் தேயிலை தொழிலின் தந்தையென்று சொல்லப்படும் ஜேம்ஸ் டெய்லர் தான் முதன் முதலில் எடுக்கப்பட்ட கொழுந்தை தனது வீட்டு வராந்தாவில்-திண்ணையில் உலர்த்தி பதப் படுத்தி தேயிலைத் தூள் தயாரித்தார். இவர்தான் தேயிலை அரைப்பதற்காக முதல் முதல் ஒரு கட்டிடம்-ஸ்டோர் (Factory) கட்டினார். இதன் பின்னால் தான் நவீன முறையில தேயிலை தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டு லட்சக்கணக்கான டன்களில் உயர்தர தேயிலைத்தூள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிச்செய்யப்பட்டது. இந்த வகையில் 1867ம் ஆண்டில் முதல் முதல் ரூபா 58% பெறுமதியான 23 ராத்தல் தேயிலை இலண்டனுக்கு ஏற்றுமதியானது. இன்று அதனுடைய ஏற்றுமதி ஒரு வாரத் 35 லட்சம் கிலோவுக்கு மேலாகும். இன்று நாட்டின் பொருளாதாரத்தில் 3/5 பங்கை தோட்ட தொழிலாளர்களின் உழைப்பில் உற்பத்தியாகின்ற தேயிலையின் ஏற்றுமதி தான் பூர்த்தி செய்கிறது.

தேயிலை மட்டுமல்ல; ரப்பர் தோட்ட தொழிலும் ஆரம்பிக்கப்பட்டு அதுவும் தன்னிகரில்லாத அளவிற்கு வளர்ந்து தேயிலையோடு சரி சமமாக ஏற்றுமதியானது குறிப்பிடத்தக்கது.

## 10

இன்று நாட்டின் தேவையை பொருளாதாரத்தில் முக்கால் வாசிப்பங்கை தோட்டத்தொழிலாளர்களின் உழைப்பே பெற்றுக் கொடுத்தாலும் தொழிலாளர்கள் பெறுவதே குறைந்த கூலிதான். இந் நாட்டின் மற்றைய தொழிலாளர்களின் வருமானத்தைக் பார்க்க மிகக் குறைவு தான். தொழிலாளர்களின் சம்பள முறைகளைப் பார்க்கும்போது மிகவும் வேதனைக்குரியது.

1919ம் ஆண்டில் பெரியகங்காணி முறையும், தொழிலாளர்களுக்கு இருந்த கடன் முறையும் தள்ளுபடி செய்யப்பட்டது 1921ம் ஆண்டு இலங்கை தேயிலை ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய தொழிலாளர்களுக்காக இந்திய சர்க்கார் ஒரு ஏஜெண்டை நியமித்தது. இவரது பேச்சு வார்த்தை மூலம் 33 சதமாக நிர்ணயிக்கப்பட்டது. பின்னால் இந்த சம்பளம் 54 சதமாகக் உயர்த்தப்பட்டது. இடையில் தேயிலையின் விலை வீழ்ச்சி காரணமாக 44 சதமாகக் குறைக்கப் பட்டது. 1923ம் ஆண்டில் இந்திய குடியேற்ற தொழிலாளர் சட்ட மூலம் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டது. அந்த காலக் கட்டத்தில் தொழில் கட்டுப்பாடு இலாகா ஒன்றும் நிறுவப்பட்டது. பின் தொழிலாளர்களுக்காக 1931ல் தொழில் தகராறு சம்பந்தப்பட்ட சட்டமும் 1935 இல் நஷ்ட ஈடு சம்பந்தப்பட்ட சட்டங்களும் அமுலுக்கு வந்தன.

1944ல் சம்பள நிர்ணய சபைகள் தோற்று விக்கப்பட்டன. இதன் பின்னால் பல சட்டங்களும் தோன்றின. 1933க்குப் பின்னால் பல தொழிற் சங்களும் தோன்றி தொழிலாளர்களின் நலனுக்காகவும், சம்பள உயர்வுக்காகவும் போராடி வருகின்றன என்றாலும் தொழிலாளர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனைத் தீரவில்லை.

[தொடரும்]

# வரப் பெற்றோம்

## இலட்சுமணன் கிழித்த கோடு

ஆசிரியர்:

எம். எஸ். தியாகராஜன்,

விலை ரூ. 12-50

பக்கம் : 156

வெளியீடு :

**தமிழரசி பதிப்பகம்**

10. சல்லிவன் ஸ்கார்டன் லேன்
மயிலாப்பூர்
சென்னை—600 004.

இருட்டிலே ஒளி பாய்ச்சுகிற உன்னத பணியை செய்ய வேண்டியவர்கள், ஒளியிலே இருட்டைப் பரப்பிக் கொண்டிருக்கிற ஒரு சாராரின் இரண்டாவது முகத்தை வெளிச்சம் போட்டு காட்டுவதற்கெனவே எழுதப்பட்ட கதைதான் 'இலட்சுமணன் கிழித்தகோடு' என முன்னுரையிலே ஆசிரியர் குறிப்பிடுவது போல ஒளியிலே இருட்டைப் பாய்ச்சிடும் மனிதர்களை இனம் காட்டுகிறார்.

இச்சிறுகதை தொகுதியிலே மேலும் 'காதலி சொன்னகதை' 'நன்றி உணர்வு' 'சத்திரத்தில் ஓர் இரவில்' 'சினிமா ஆசை' 'அந்தக் குழந்தை' 'வீட்டுக்கு வீடு'-போன்ற பல சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

எதார்த்தத்தை கற்பனை கண்ணோடு பார்க்காமல் நிஜமாக பிரதிபலிக்கிறார். இவரது கதையம்சங்கள் சாதாரணமானவை என்றாலும் சொல்லுகிற பாணி சுவாரஸ்யமாக இருக்கிறது.

கனவுக் கோட்டைகளை அடுக்கு மொழிகளில் வர்ணிக்குப் எழுத்துக்குச் சொந்தக்காரரான 'தாய்' ஆசிரியர் வலம்புரிஜான் மதிப்புரையுடன் இந்தொகுப்பு வெளிவந்துள்ளது.

O

## மணிக்கொடி பொன் விழா மலர்

வெளியீடு : முன்னைவன்

விலை: ரூ. 10

200 பக்கங்கள்

பிரதிகளுக்கு :

சண்முகம் ஏஜன்ஸீஸ்

20, கோதண்டபாணித் தெரு,
கும்பகோணம்—612 001.

'மணிக்கொடி'-என்ற இலக்கிய இதழ் தோன்றி 50 வருடங்கள் பூர்த்தியாகும் சூழலில் "மணிக்கொடி பொன் விழா மலர்" மிகச் சிறப்பான முறையில் வெளியிடப்பட்டுள்ளது.

கலை இலக்கியப் பரப்பில் 'மணிக்கொடி' ஒரு தனி முத்திரையை பதித்துள்ளது. நவீன தமிழிலக்கியவரலாற்றில் மணிக்கொடி ஒரு வரன் முறையான மதிப்பீட்டின் அத்தியாவசியம்- கார்த்திகேசு சிவத்தம்பி; மணிக்கொடியின் இலக்கியக் கொள்கை - கோ. கேசவன்; தமிழ் இலக்கியப் பத்திரிகை உலகில் மணிக்கொடி - வே. சிதம்பரம்; வரலாற்றுப் பொருள் முதல் பார்வையில் மணிக்கொடி - சி. கனகசபாபதி போன்ற பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

'முனைவன்' ஏடு வெளியிடப்பட்டுள்ள இப்பொன் விழா மலர் பாராட்டுதலுக்குரியது. தமிழ் இலக்கியப் போக்குகளை அறிந்துகொள்ள முயற்சிப்போக்கு மிகவும் பயனுள்ள நூலாகும்.

**தேனீ**

## இலங்கை...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

**இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ள முடியும்?**

'முதலாளித்துவ சமூக உருவாக்கத்திற்கு முந்தியதான வரலாற்றுக் கால கட்டத்தில் ஒரு இனம் தனக்கென பூகோளப்பரப்பையும், அரசியல் எல்லைகளையும் கொண்டிருந்தால் மாத்திரந்தான் அது முதலாளித்துவ சகாப்தத்தில் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட முடியும் என்று சொல்லலாமா?

இப்படித்தான் இன்றைய இலங்கையின் தமிழ் தேசிய இன விடுதலைக்காகப் போராடும் குழுக்கள் கருத்துக் கொண்டுள்ளனர். மலையகத்தமிழ் மக்களுக்கு 'பாரம்பரியப் பிரதேசம்' என்ற ஒன்று இல்லை என்று கூறுவதன் பின்னால் இந்த கருத் தோட்டந்தான் மறைந்து கிடக்கின்றது. பாரம்பரியப் பிரதேசம் ஒன்று இல்லாதவர்களை எப்படித் தேசிய இனமாக அங்கீகரிக்க முடியும்? என்று வாதிடுவதன் அர்த்தம் வேறு என்ன?

வேறு ஒன்றுமல்ல. மார்க்ஸீய சொற்றொடர்களையும், ஸ்டாலின் தேசிய இனவரையறுப்பையும் அப்படியே அதன் சாராம்சம் புரியாமலேயே பயன்படுத்துவதின் விளைவுதான் இது. இல்லையெனில் இது ஒரு குட்டி முதலாளித்துவப் புரட்டல் வாதமாகும்.

ஸ்டாலின் தேசிய இனம் குறித்து எழுதுகையில் 'வரலாற்று வழி வந்த மக்கள் தொகுதி' என்று கூறுகின்றார் இந்த 'வரலாற்று வழி வந்த' என்ற வாசகத்தின் சாராம்சம் என்ன? நிலப்பிரபுத்துவ வரலாற்றுக் கால கட்டத்தையா இங்கு குறிப்பிடுகின்றார்?

இல்லை. நிலப்பிரபுத்துவமோ அதற்கு முந்தியதான சமூக அமைப்போ இங்கு அர்த்தமாகாது. முதலாளித்துவ சமூக அமைப்பின் ஊடாக வளர்ச்சியுற்று சகல வழிகளிலும், அரசியல், பொருளாதார, கலாச்சார அம்சங்களைஉட்கொண்டு தனக்கென தனித்துவமான தன்மைகளைக் கொண்டு உருவாகின்ற சமூக உருவாக்கம் ஒவ்வொன்றும் தேசிய இனமாகப் பரிணமிக்க முடியும். இப்படியான சமூக உருவாக்கம் நிகழ எடுத்துக் கொள்ளப்படும் கால கட்டந்தான் "வரலாற்று வழி வந்த..." என்ற வாசகத்தின் சாராம்சம். இந்த சமூக உருவாக்கம் எந்தக் களத்தில் நிகழ்கிறதோ அந்தப் பூகோள பிராந்தியமே அதன் தேசம். அது வேறு பல இனங்கள் வாழ்கின்ற நாடாகக்கூட இருக்கலாம். உதாரணமாக மலேசியாவில் குடியேறிய சீன மக்கள் அங்கே தமக்கென ஒரு பூகோளப் பரப்பை கொண்டிருக்கவில்லை. வியட்நாமில் குடியேறிய சீன மக்கள் அங்கே தமக்கென ஒரு பூகோளப் பரப்பைக் கொண்டிருக்கவில்லை. இன்று இஸ்ரேலியர்கள் குடியேறியுள்ள பாலஸ்தீனம் அவர்களின் பூர்வீகப் பூகோளப் பரப்பல்ல. அமெரிக்காவில் குடியேறிய நீக்கிரோக்கள் அங்கே ஒரு பூகோளப் பரப்பைகொண்டிருக்கவில்லை. எனினும் மலேசியாவில் குடியேறிய சீனர்கள், வியட்நாமில் குடியேறிய சீனர்கள், அமெரிக்காவில் குடியேற்றப்பட்ட நீக்கிரோக்கள், பாலஸ்தீனத்தில் குடியேற்றப்பட்ட இஸ்ரேலியர்கள் எல்லோரும் தேசிய இனம் என்ற அந்தஸ்தை எப்படிப் பெற்றார்கள்.

நிலப்பிரபுத்துவ சகாப்தம் அழிந்து முதலாளித்துவ சகாப்தம் தோன்றிய வரலாற்று கால கட்டத்தில் வெவ்வேறு நாடுகளில் குடியேறிய, குடியேற்றப்பட்ட மக்கள், அந்தந்த நாடுகளின் அரசியல் பொருளாதார சமூக கட்டமைப்பின் வளர்ச்சிக்கொப்ப தாங்களும் புதிய சமூக உருவாக்கமாக ஆனார்கள். இது காலனிக்குப் பிந்திய சமூக உருவாக்கங்களாகும். இது நிகழ்வதற்கு எடுத்துக்கொண்ட காலம் மிக நீண்டதாக இல்லை ஆகவே நீண்ட கால வரலாறு இல்லை என்பதற்காக இந்த மக்கள் தொகுதிகளை தேசிய இனமென்று கூறாமல் விடலாமா?

(தொடரும்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

## தப்பித்து வர முடியாது

யாழ்ப்பாணம்,மன்னார்,காங்கேசன் துறை முதலான கரையோர பகுதிகளில் வாழும் பூர்வீகத் தமிழர்கள் நினைத்தால் விசைப்படகு மூலம் இந்தியா வந்து தஞ்சம் புக முடியும். ஆனால் இலங்கையின் நடுப் பகுதியில் வாழும் மலையகத் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவது என்பது மிகக் கடினம் மலையகப் பிரதேசத்திற்கு கடலெல்லை எதுவும் இல்லை. நூறு, இருநூறு மைல்களைகடந்துதான் கரையோரப் பகுதியிலுள்ள மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு வரமுடியும். இராணுவ குண்டர்களின் கொடுமைகள் - கெடுபிடிகளில் இது எந்தவகையிலும் சாத்திய மில்லை. அப்படியே தப்பித்து வருவதென்றாலும் இவர்களின் ஏழ்மையும் வறுமையும், அறியாமையும் இடம் கொடுக்க தயாராக இல்லை.

இந்நிலையில் பஞ்சம் பசியோடு அச்சத்திற்கும் உட்பட்டு வாழும் இம்மக்கள் ஆயிரக்கணக்கில் இலங்கை கண்டியிலுள்ள இந்திய துணைத்தூதுவரகத்திற்கு சென்று முறையிடுகின்றார்கள்; அங்குள்ள அலுவலர்களிடம் கதறி அழுது கண்ணீர் வடிக்கும் நிலையை தினசரி பார்க்கலாம் என்று அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

## இந்திய அரசுக்குள்ள கடமை

ஒப்பந்த அடிப்படையில் இந்தியா திரும்ப இருக்கும் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களை காக்க வேண்டியதுஇந்திய அரசின் கடமை. ஆகவே உடனடியாக இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல் போக்கு வரத்தை தொடங்க வேண்டும் என்று பலர் அரசை கோரிவருகிறார்கள்.

கப்பல் போக்கு வரத்து இல்லாததால் வரவேண்டியவர்கள் வந்துதங்கள் மறுவாழ்வை அமைத்துக் கொள்ளவோ, தங்கள் எதிர்காலத்திற்கு வழி ஏற்படுத்தி கொள்ளவோ முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; கப்பல் போக்குவரத்து இல்லாததால், யாழ்ப்பாணம், மன்னார் முதலான இலங்கையின் வடப் பகுதியிலிருந்து பல மலையகத்தமிழர்கள் [இந்திய வம்சாவழியினர்] விசை படகுகளின் மூலம் இங்கு வந்து தஞ்சம் புகுந்துள்ளனர். இதனால் இவர்கள் ஒப்பந்தப்படி பெற வேண்டிய உரிமைகளையும், மறுவாழ்வுத் திட்டப்படி பெற வேண்டிய சலுகைகளையும் இழந்து அகதிகள் அந்தஸ்திலேயே இருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

## அகதிகளாக வந்ததால்...

ஒப்பந்தப்படி நாங்கள் இங்கு வந்திருப்போமானால் எங்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் நடத்த கடன் உதவி போன்றவைகளை இந்த அரசு கொடுத்திருக்கும் இப்போது அகதிகளாக தஞ்சம் புகுந்ததினால் வாழ்க்கைச் செலவுத் தொகை, இருப்பிடம் மட்டுமே அரசு தருகிறது. இப்படியே எத்தனை நாட்களுக்கு இருப்பது என்று ஒப்பந்தப்படி வர வேண்டியதற்கு பதிலாக அகதிகளாக வந்திருக்கும் பலர் தெரிவிக்கிறார்கள்.

எனவே ஒப்பந்தப்படி வர வேண்டிய மக்களின் பிரச்சனைகளை உணர்ந்து, அவர்களுக்கு உடன் உதவ வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு இந்திய அரசு உடனடியாக மேற்படி கப்பல் போக்குவரத்தை ஆரம்பித்து இம்மக்கள் வருகையை துரிதப்படுத்தி மறுவாழ்வு உதவிகளை அளித்து நிலையான வாழ்வுக்கு வழி செய்திட வேண்டும். O

Editor & Publisher : T. S. RAJU, Gandaiamman kovil Street, Madras-600 094. Printer : L.S. Srinivasan at Jai Kalidas Press, 29. B.E. Colony, 4th Street, Madras-24.
Makkal Maruvazhvoo is collaborating with 'ISLAND TRUST' in order to reach the repatriates and refugees effectively.

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்து வருகிறது. அவர்களது வாழ்க்கைச் செலவுக்கு பணம் கொடுக்கிறது. அத்தியவசிய பொருட்களையெல்லாம் கொடுத்து உதவி வருகிறது.

இலங்கையிலிருந்து புகலிடம் தேடி இங்கு வந்துள்ளவர்கள் காலவரையின்றி இங்கு தொடர்ந்து அகதிகளாக வாழ்வது தன்மானத்திற்கு இழுக்கு என்பதுடன், இந்திய அரசுக்கும் தமிழக அரசிக்கும் மேலும் தொல்லை கொடுக்கக் கூடிய நிலையே உருவாகும் என்று ஈழத்தலைவர் ஒருவர் வேதனையுடன் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் குறிப்பிட்டுள்ளபடி தொடர்ந்து வரும் அகதிகளால் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல; அகதிகளுக்கும் பிரச்சனை.

அகதிகளாக இந்தியக் கரையோரங்களில் ஒதுங்கும் ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதும், அத்தியாவசிய உதவிகளை துரிதமாக கிடைக்கச் செய்வதும் மனித உரிமைகள் மட்டுமே அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவிடப் போவதில்லை. இவர்களால், இவர்களுக்கும் இந்நாட்டுக் ஏற்படக் கூடிய தொல்லைகளும் ஏற்படுகின்றன. இம்மக்களின் சமூக கலாச்சார பழக்க வழக்க தொழில் அனுபவங்கள் ரீதியாக இவர்கள் பாதிப்புக்குட்பட்டு வருகிறார்கள் என்பதோடு உள்நாட்டு மக்களின் சமூக விருப்பு வெறுப்பு, குறுகிய உணர்வு, வெளி நாட்டாரை வெறுக்கும் மனோ நிலை, இன உணர்வு எண்ணங்கள் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதை ஆங்காங்கே காணக் கூடியதாக இருக்கிறது.

ஆக அகதிகளாக வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு' அகதிகளாக வரும் அவர்களுக்கும், அகதிகளை ஏற்கும் இந்நாட்டுக்கும் பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

## துரிதமான நடவடிக்கை

இந்த பிரச்சனைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு—ஈழத்தமிழர், இந்தியா வரவிருக்கும் இந்திய வம்வழித் தமிழர், அகதிகள் ஆகியோரின் நலன்களை கணக்கில் எடுத்துக் கொண்டு இந்திய அரசு இப்பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு காண முன் வர வேண்டும்.

இந்தியா மேற் கொள்ளும் துரிதநடவடிக்கைகளால் இலங்கையின் இன பிரச்சனைக்கு ஒரு முடிவுக்கு வரலாம்—ஈழக் கோரிக்கைக்கு ஒரு தீர்வு காணலாம். இதன் மூலமாகத்தான் ஒட்டு மொத்தமாக ஈழத் தமிழர், இலங்கை மயையகத்தில் வாழும் இந்திய வம்சாவழி தமிழர், அகதிகளாக வரும் தமிழர் உட்பட்ட இலங்கைத் தமிழ்மக்களை இலங்கை அரசின் இன ஒடுக்கல் அடக்கு முறையிலிருந்தும், சிங்கள இராணுவத்தின் கொலை வெறியிலிருந்து காப்பாற்ற முடியும் - அவர்கள் படும் வேதனைகளிலிருந்து மீட்டெடுக்க முடியும்.

-மோகன் குமார்

---

## தேவை:

## இலங்கை ரப்பர் தோட்ட நாட்டுப் பாடல்கள்

'மக்கள் மறுவாழ்'வில் வெளிவந்துக் கொண்டிருக்கும் 'நாட்டுப் பாடல்கள் விரவிய இலங்கை மலையகத் தமிழர் கதை' விரைவில் நூல் வடிவில் வெளிவரவிருக்கிறது.

இந்நூலில் (இலங்கை) ரப்பர் தோட்ட நாட்டுப் பாடல்களையும் தொகுத்து வெளியிட உத்தேசித்துள்ளேன்.

உங்களுக்கு தெரிந்த ரப்பர் தோட்ட பாடல்களையும், இலங்கை ரப்பர் தோட்டங்களிலிருந்து தாயகம் திரும்பியயோருக்கு தெரிந்த பாடல்களையும் சேகரித்து அனுப்பும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

சேகரித்து அனுப்பும் உங்கள் பெயரும் இந்த நூலில் இடம் பெறும்; பாடல்களை 'மக்கள் மறு வாழ்வு' முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

டி.எஸ். ராஜு

Regd. No R.N. 42556/83 Regd. No TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின் வழிகாட்டி

மக்கள் மறு வாழ்வு

தொடர்பு கொள்ள முகவரி :
1, தெற்கு கங்கையம்மன் கோயில் 2வது தெரு,
சென்னை-600 094

# இலங்கைத் தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால் உடனடியாக தீர்வுகாண இந்திய அரசு முயல வேண்டும்!

இலங்கைப் பிரச்சனை ஒரு முடிவுக்கு வருவதற்குப் பதில் நீண்டுக் கொண்டே போவதால்—காலம் கடந்து செல்வதால் சம்பந்தப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் பல தரப்பட்ட பிரச்சனைகள் தோன்றி அவர்களது வாழ்வு சீர் குலைந்து வருகிறது.

ஒரு புறத்திலே ஈழப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் மேலும் மேலும் ராணுவத்தின் அடக்கு முறைக்கு ஆளாகிவருகிறார்கள்: இன்னொரு புறம் மலையகத்தில் இருக்கும் இந்திய வம்சாவழி மக்கள் ஒப்பந்தப்படி இந்தியா திரும்ப முடியாமல் இருக்கிறார்கள். மற்றொரு புறம் இலங்கையிலிருந்து பலர் அகதிகளாக வந்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி முப்புறமும் பிரச்சனை மூண்டெழுந்தவாறு இருக்கிறது.

## ஈழத்தமிழர்கள் படும் இன்னல்கள்

ஈழத்தில் தமிழ் மக்கள் பெரிதும் இன்னல்களுக்குள்ளாகி வருகிறார்கள். ஈழக் கோரிக்கை முன் வைத்து விடுதலைப் போராளிகள் உக்கிரமாக தமது கொரில்லா போரை நடத்தி வரும் அதே வேளையில் இலங்கை சிங்கள இராணுவம் இந்த விடுதலைப் போராளிகளை எதிர்த்து நிற்பதற்குப் பதில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவித்து வருகிறார்கள்.

ஆண், பெண், முதியவர், குழந்தை என்றெல்லாம் பாராமல் கண்ட கண்டவர்களை சுட்டுக்கொல்கிறார்கள். உயிரோடு தீயிட்டுக் கொளுத்துகிறார்கள். வீடுகளிலிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப் படுகிறார்கள். இளைஞர்களும், யுவரிகளும் இராணுவ வீரர்களால் பிடித்து செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இளம் பெண்கள் கெடுக்கப்பட்டு இராணுவத்தினருக்கு வேளையாட்களாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் படுகிறார்கள்; உடமைகள் கொள்ளை அடிக்கப்பட்டு,வீடு, வியாபார நிலையங்கள் தீக்கிரையாக்கப்படுகிறது.

குழிகளைத் தோன்றி உயிரோடு புதைக்கும் அளவிற்கு கொடுமைகள் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

யாழ்ப்பாணக்குடா நாட்டிற்குள் மற்றும் வவுனியா, முல்லைத் தீவு பகுதிகளில் நடத்திய இவர்களில் அடக்குமுறை கிழக்கே அம்பாறை வரை விஸ்தரிக்கப்பட்டு விட்டது.

வடகிழக்கு பகுதிகளில் ஆட்சி, நிர்வாகம் ஸ்தம்பித்துப் போய் இராணுவத்தின் ஆட்சியில் அவர்களின் கொடுமைக்கும் அடக்கு முறைக்கும் அனுதினமும் ஆளாகிவருகிறார்கள். ஈழத் தமிழர்களின் இறைமையே அழிந்துவிட்டது. வடகிழக்கு பகுதிகளில், தமிழர் வாழ்வே அழிந்து விட்டது.

## இந்தியா வரவேண்டிய மலையகத் தமிழர்

இலங்கையின் மலை நாட்டிலிருந்து சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்தியா திரும்ப வேண்டிய தமிழ் மக்கள் 2 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் 84 ஆயிரம் கடவுச் சீட்டும், பிற சான்றிதழ்களும் பெற்று தயாராக இருக்கிறார்கள்.

ஈழப்பிரச்சனைக் காரணமாக வட, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் மட்டுமல்லாது இந்திய இலங்கை கடல் எல்லைகளிலும் இலங்கை இராணுவத்தினரின் — கடற்படையினர் அட்டகாசம் அதிகரித்துள்ளது,

ஈழப்போராளிகள் என்று இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்வதும்-அவர்களது படகுகளையும், பிடித்த மீன்களையும் கைப்பற்றிச்செல்வது வழக்கமாகி விட்டது.

கடற் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை இன்னும் பல காரணங்களால் இராமேஸ்வரம்—தலைமன்னார் கப்பல் சேவை நிறுத்தப் பட்டும் விட்டது.

இதனால் வரவேண்டியுள்ள-தாயாராக இருக்கும் இந்திய வம்சாவழியினராகிய மலையகத் தமிழர்கள் வர முடியாத நிலையில் இருக்கிறார்.

இவர்கள் இந்தியா செல்கிறோம் என்ற நம்பிக்கையில் இந்தியா வரவும் நாள் குறித்து, அந்த நாட்களும் கடந்த நிலையில் தாம் ஆற்றி வந்த வேலைகளையும் இழந்த நிலையில் அங்கேஇருக்கிறார்கள். வேலையில்லாததால் வருமானத்திற்கு வழியில்லாது வறுமைக்கும், பட்டினிக்கும் ஆளாகி வருகிறார்கள். தாம் சேமித்துவைத்த வற்றையும் இழந்து வெறும் கையோடே இந்தியா வர வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளார்கள் - தள்ளப் படுவார்கள்.

இதனால் இங்கு வந்தாலும் அவர்கள் தமது மறுவாழ்வை அமைத்துக் கொள்வதில் மேலும் இன்னல்களுக்குள்ளாவார்கள் என்பதும் கண்கூடு.

## அகதிகள் பிரச்சனை

இலங்கையில் இராணுவத்தினரின் கொடுமைகள் அதிகரித்து வருவதால்—குறிப்பாக அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப் பட்டு வருவதால் அவர்களின் கொடுமைக்கும் கொலை வெறிக்கும் பயந்து உயிர் தப்பினால் போதும் என்று பலர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு மத்திய அரசு பல கோடி ரூபாய் செலவு

(11-ம் பக்கம் பார்க்க)